**தலைப்பு 126 - கல்வி அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 கணக்காய்வு அபிப்பிராயம்

கல்வி அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கல்வி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 27 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்வி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியொகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) கல்வி அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 ஏனைய பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அமைச்சிற்கு ஏனைய பெறுவனவுகளாக ரூபா 2,143.6 மில்லியன் கிடைத்திருந்தது. 07 வருமானத் தலைப்புக்களின் கீழ் சேகரிக்கப்பட்டன எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் இந்த வருமான மூலகங்கள் தொடர்பான விபரமான பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படடிருக்கவில்லை. | ஏனைய வருமானங்களை பகுப்பாய்வு செய்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | இந்த வருமானத் தலைப்பிற்காக வருமான கணக்கீட்டு உத்தியோகத்தராக கல்வி அமைச்சின் செயலாளர் செயற்படாததனால் ஒரு பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.6.1 வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் வைப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 2 ஆண்டுகளை மிகைத்த வைப்புக்கள் அரசாங்க வருமானத்திற்கு செலவுவைக்கப்பட வேண்டிய போதிலும் இரண்டு ஆண்டுகளை மிகைத்த ரூபா 68.8 மில்லியன் தொகையான 5 நானாவித வைப்புக்களை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | வைப்புக் கணக்குகளில் காணப்படுகின்ற 2 ஆண்டுகளை மிகைத்த ரூபா 68.8 மில்லியன் மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

### 1.6.3 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் என்பவற்றின் மீதி ரூபா 151,170.5 மில்லியனாக இருப்பதுடன் இது அத் திகதியில் உள்ளவாறான பௌதீக மீதியை அடிப்படையாகக் கொண்ட பெறுமதியாக இருந்தபோதிலும் அது புத்தகத்திலுள்ள மீதிகளுடன் இணங்கியிருக்கவில்லை. | இறுதிக்கணக்குகளிலுள்ள சரியான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | 2018.12.31 இல் முடிவடைந்த ஆண்டிடிற்கான ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் Ledger மீதியும் BOS அறிக்கையின் மீதியும் சமமானதாக இருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனைகளின் பிரகாரம் 2018 ஆகஸ்ட் மாத்தின் போது அனைத்து சொத்துக்களின் பெறுமதி CIGAS நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து அகற்றப்பட்டு மீண்டும் உள்ளடக்கப்பட்டிருந்தது. |

### 1.6.4 முற்பணக் கணக்கு மீதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் அறவிட வேண்டிய மீதி ரூபா 184.9 மில்லியனாக இருந்ததுடன் அதில் 5 ஆண்டுகளை மிகைத்த காலமாகக் காணப்பட்டு வரும் இடமாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வுபெற்ற, மரணமடைந்த சேவையை விட்டுச் சென்ற, வேலையிலிருந்து இடை நிறுத்திவைக்கப்பட்ட மற்றும் ஏனைய ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 89.7 மில்லியன் மீதியாகும். சேவையை விட்டுச் சென்ற உத்தியொகத்தர்கள் தொடர்பான விபரம் தாபனக் கிளையில் இருக்கவில்லை. | நிலுவையாக இருந்த மீதிகளை அறவீடு செய்வதற்கு தாபனவிதிக்கோவை மற்றும் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதியை அறவீடு செய்வதற்கு ஓய்வூதியத் திணைக்களத்திற்குத் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் சில கடன் மீதிகள் தீர்த்துவைக்கப்பட்டுள்ளது. |

**1.6.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடான இணக்கமின்மைகள்**

நியதிக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 செப்தெம்பர் 19 ஆந் திகதிய 2008/37 ஆம் இலக்க அமைச்சு சுற்றிக்கை | சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் இடைத்தரங்களுக்காக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது சம்பந்தமாக உறுதியான நடைமுறை முன்வைக்கப்படாததன் காரணமாக பாடசாலைகளில் அதிபர்கள் தங்களது தற்றுணிபின் பேரில் போதிய புள்ளிகள் வழங்கும் வரையறைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பாடசாலைகளில் இடைத்தரங்களுக்காக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் உறுதியான நடைமுறையைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2008/37 ஆம் இலக்க சுற்றறிக்கை தற்பொழுது திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது. இதன்போது இடைத்தரங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்குரிய நிர்ணயிக்கப்பட்ட புள்ளி வழங்கும் முறைமையை சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. |
| (ஆ) | 1964 நவம்பர் 20 ஆம் திகதிய 1964/27 ஆம் இலக்க அமைச்சரவை சுற்றறிக்கை மற்றும் 1996 யூன் 21 ஆம் திகதிய பழைய மாணவர்கள் சங்க கடிதம் | பழைய மாணவர்கள் சங்க தலைவராக அதிபர் நியமிக்கப்பட வேண்டியபோதிலும் அவ்வாறு நியமிக்கப்படாத 15 சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் பழைய மாணவர் சங்கங்களை உருவாக்குதல் உத்தியோகத்தர்களை நியமித்தல் பாடசாலைகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குதல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டும். | சில பாடசாலைகளில் அதிபர் பழைய மாணவர் சங்கங்களின் தலைவர் இல்லாமைக்கு நீதிமன்ற வழக்குகள் விசாரணை செய்யப்படுவதுடன் (உதாரணம் மலியதேவா மகளிர் வித்தியாயலம, குருணாகல்) அந்த தீர்ப்பு கிடைத்ததன் பின்னர் இதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது |
| (இ) | 2018 ஏப்ரல் 25 ஆந் திகதிய 11/2018 ஆம் இலக்க பாடசாலை புத்தக சாலைகள் மற்றும் கற்றல் வளங்கள் மத்திய நிலையத்திற்கான | சில பாடசாலைகளால் உரிய ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவ்வாறான 25 | உரிய ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பிரதான இரண்டு குறிக்கோள்களை கருத்தில் கொண்டு ஆலோசனைக் கோவைகள் திருத்தப்படடன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆலோசனைத் தொகுப்பு | சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | | 1 கணக்கயர்வு மேற்பார்வை மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளின் போது சட்டரீதியான பின்னணியை ஏற்படுத்துதல், நூல் நிலையப் புத்தகங்களை பாவனையிலிருந்து அகற்றும் நடைமுறையை இனங்காணல் மற்றும் ஆசோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் தொடர்பான மேற்பார்வை செய்தலும் புலனாய்வு செய்தலும்<br><br>2. கைதவிர்ப்புச் செய்யும் நடைமுறை அமுல்படுத்தப்படாத சந்தர்ப்பங்கள் காணப்படுவதனால் திட்டமிட்டவாறு வாசிப்பு மேம்பாட்டு உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொண்டதன் பின்னர் இந்த ஆலோசனைத் தொகுப்பு தொடர்பாக அவர்களுக்கு பயிற்சிகள் வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் viii ஆம் | கல்வி அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 112.2 மில்லியன் பெறுமதியான 15 கணக்காய்வு | கணக்கயர்வு ஐயவினாக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பதில்கள் | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான பதில்கள் கிடைக்காத கணக்காய்வு ஐயவினாக்களுக்காக |

| | | | |
|---|---|---|---|
| பகுதியின் 42 ஆம் பிரிவு | ஐயவினாக்களுக்கு அறிக்கைத் திகதி வரையும் பதில் வழங்கப்படாதிருந்ததுடன் அக் கணக்காய்வு ஐயவினாக்கள் வழங்கப்பட்டு 01 மாத்திலிருந்து 14 மாத்ங்கள் வரையான காலம் எடுத்திருந்தது. | வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விரைவாக பதில்களை வழங்குமாறு உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |

### 1.6.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| | ------------------------------------------- | ------------------ | ----------------------------- |
| (அ) | 2008 ஏப்ரல் 30 ஆம் திகதிய 2008/17 ஆம் இலக்க கல்வி அமைச்சு சுற்றறிக்கையின் பிரகாரம் வசதிகள் மற்றும் சேவைக் கட்டணங்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் கட்டணங்கள் என்பவற்றைத் தவிர்த்து ஏனைய எப்பணமும் அறவிட முடியாது என்ற போதிலும் அதற்கு இணக்கமின்றி 2020 உயர்தரத்திற்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட 193 மாணவர்களிடமிருந்து ரூபா 2.8 மில்லியன் பணம் தென்மாணத்திலுள்ள பிரதான ஆண்கள் பாடசாலையினால் சேகரிக்கப்பட்டிருந்தது. இப்பணம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கணக்கிற்கு செலவு வைக்கப்படாதிருந்ததுடன் பெற்றோர் குழு அங்கத்தவர் ஒருவரின் பெயரில் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | காணப்படுகின்ற எழுத்திலான அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | தேசிய பாடசாலைகளில் பாதீட்டினைத் தயாரித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல் அதிபரின் பொறுப்பாகும். 2019.04.09 ஆம் திகதிய 19/2019 மற்றும் 05/2015 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் மூலம் பணத்தை அறவீடு செய்தலை தடைசெய்யும் ஏற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்களிடமிருந்து முறையற்ற வகையில் பணத்தை சேகரிப்பது சம்பந்தமாக கிடைத்த முறைப்பாடுகளின் பிரகாரம் பொதுவாக அனைத்து தேசிய பாடசாலை அதிபர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1964 நவம்பர் 20 ஆம் திகதிய 1964/27 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 1996 யூன் 21 ஆந் திகதிய பழைய மாணவர் சங்கத்தின் கடிதத்தின் பிரகாரம் பழைய மாணவர்கள் சங்கம் தோற்றுவிக்கப்படுதல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 18 பாடசாலைகளின் பழைய மாணவர்கள் சங்கங்களின் மூலம் | பாடசாலைகளின் குறிக்கோள்களுக்காக நிதியைச் சேகரிக்கின்ற பழைய மாணவர் சங்கங்களால் மேற்கொள்ளப்படுகின்ற பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகள் | பாடசாலை மாணவர்கள் சங்கங்களின் மூலம் பாடசாலைகளில் நலன்புரி மற்றும் செயலாற்றல்களை மேம்படுத்துவதற்கான செயற்திட்டங்களை திட்டமிட்டு தேசிய பாடசாலைகளின் அதிபர்களால் தேசிய |

| | | |
|---|---|---|
| ரூபா 129.19 மில்லியன் பணம் 2018 ஆம் ஆண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 09 பாடசாலைகளின் நடவடிக்கைகளுக்காக ரூபா 23.99 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. 09 பாடசாலைகளின் பழைய மாணவர்கள் சங்கங்களால் சேகரிக்கப்பட்ட ரூபா 69.93 மில்லியன் பணம் அப்பாடசாலைகளின் எந்த நடவடிக்கைகளுக்காகவும் செலவு செய்யப்பட்டிருக்கவில்லை. 06 பாடசாலைகளின் பழைய மாணவர்கள் சங்கங்களால் ரூபா 19.77 மில்லியன் நிலையான வைப்புக்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும். | பாடசாலைகள் பணிப்பாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளலும் இடம்பெறுகின்றது. இதனைத் தவிர்த்து பழைய மாணவர் சங்கம் நிதி நடவடிக்கைகள் சம்பந்தமாக தேசிய பாடசாலைகள் கிளையின் நேரடி மேற்பார்வை இடம்பெறுவதில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| ஆண்டிற்காக வேண்டப்பட்ட கட்டுநிதி ரூபா 98,266.87 மில்லியனாக இருந்ததுடன் திறைசேரியினால் வழங்கப்பட்ட கட்டுநிதி ரூபா 64,229.22 மில்லியனாகும். முழு பெறுவனவுகளின் மொத்த தொகை ரூபா 68,872.77 மில்லியனாக இருந்ததுடன் மொத்த செலவுகள் ரூபா 74,990.33 மில்லியனாக இருந்ததன் காரணமாக ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 6,117.56 மில்லியனாகும். அதற்கிணங்க அமைச்சினால் முறைப்படியாக கட்டுநிதி முகாமைத்துவம் செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக திட்டங்களைத் தயாரிப்பதற்கும் அதற்கிணங்க கட்டுநிதி முகாமைத்துவத்தை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பந்தியிலுள்ள விடயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |

**2.1 செலவு முகாமைத்துவம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 04 மூலதன செலவு விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலதனம் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 57 மில்லியன் நிதி ஏற்பாடு முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது. | குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு முறையான முகாமைத்துவத்துடன் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். | புதிய ஆங்கில ஆசிரியர் பயிற்சி நிலையத்தின் காணியைப் பொறுப்பேற்கும் போது ஏற்பட்ட சிக்கல்கள் மற்றும் பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிக்காமையும் முடிவுறுத்தாமையும் சேமிப்புக்களுக்கு காரணமாக இருந்தது. |
| (ஆ) | 04 மீண்டுவரும் செலவு விடயங்களில் ரூபா 4,805.1 மில்லியன் நிதி ஏற்பாடு 100 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. 9 செலவு விடயங்களுக்குரிய ரூபா 4652.99 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் அவை 50 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சுடையதாக இருந்தது. | ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்க வினைத்திறனாகப் பயன்படுத்துதல் வேண்டும். | கலைஞர்களுக்காக விபத்துக்கள் மற்றும் மருத்துவப் காப்புறுதிகளை வழங்குதலை டவர்ஹோல் கலையரங்கு மன்றம் மேற்கொள்ளல், இரண்டாம் நிலைக்கல்விக்குரிய வெளிநாட்டுப் பயணங்களுக்காக வேண்டுதல்கள் சமர்ப்பிக்கப்படாமை, கணனிகளை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்குரிய பெறுகை நடவடிக்கைகள் இடம்பெறாமை அரசாங்கத்தின் உதவிகள் பெற்றுக்கொள்ளப்படுகின்ற உதவிப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு கடன் வசதிகள் வழங்குவதற்கான விண்ணப்படிவங்கள் ஆண்டின் இறுதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படாமை ஆகிய விடயங்களின் காரணமாக நிதி ஏற்பாடு 100 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | மூலதன செலவுகளின் தேறிய | -மேற்படி- | நிதி ஏற்பாடு 100 |

| | | |
|---|---|---|
| ஒதுக்கீடு ரூபா 41,879.95 மில்லியனாக இருந்ததுடன் அதில் 21 செலவு விடயங்களுக்கான ரூபா 5,462 மில்லியன் நிதி ஏற்பாடு 100 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. அது தேறிய நிதி ஏற்பாட்டின் 13 சதவீதமாகும். 39 செலவு விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தேறிய நிதி ஏற்பாடான ரூபா 10718.1 மில்லியனில் ரூபா 7342.59 மில்லியன் சேமிக்கப்படடிருந்தது. அது 50 சதவீததிலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சுடையதாகும். | | சதவீதம் சேமிப்பிற்கும் 50% இலிருந்து 99% வரையான சேமிப்பிற்கும் மீண்டுவரும் செலவு விடயகளின் மூலம் ெ காடுப்பனவு செய்தல் அமைச்சரவை தீர்மானம் கிடைக்காமை, செயற்பாடுகளை அடுத்துவரும் ஆண்டுகளுக்கு பிற்போடல், திட்டங்கள் தொடர்பாக இணக்கப்பாடுகள் இன்மை, பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாமை என்பன காரணங்களாகும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2018 ஆம் ஆண்டிற்காகத் திட்டமிடப்பட்ட விளையாட்டுகள் கிளையின் 17 செயற்பாடுகளை உள்ளடக்கிய பாடசாலைகளில் வசதிகளை ஏற்படுத்துவதற்காக திட்டமிடப்பட்ட 3 பல்வேறு செயற்திட்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 1738 மில்லியனில் ரூபா 232 மில்லியன் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது. | திட்டத்துக்கு இணங்க செயற்பாடுகள் இடம்பெறுகின்றதா என்பதனை நடைமுறை ரீதியாக அவதானிப்பதன் மூலம் அவற்றின் செயலாற்றலை அளவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குறைபாடுகளைத் தவிர்க்கும் வகையில் ஒழுங்குபடுத்தும் நடைமுறைகள் மிகவும் முறைப்படியாகவும் ஆக்கபூர்வமாகவும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. |

**3.2 செயற்பணிகள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | **தேசிய கல்வி முறைமையும் தேசிய கல்விக் கொள்கையும் தயாரித்தல்** | | |
| (i) | கல்வி அமைச்சின் செயற்பாடுகளின் பிரகாரம் உலக போட்டித்தன்மைக்கு மன உறுதியுடனும் வெற்றியளித்தல் தொடர்பான நம்பிக்கையுடனும் நுழைவதற்கு முடியுமான வகையிலும் தேசிய கல்வி முறைமையை உருவாக்கும் செயற்பாடுகளை முழுமையாக நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | இலங்கையர்களின் கல்விக்காக கல்விக் கொள்கையை நிகழ்காலத்திற்குப் பொருத்தமான வகையில் தயாரித்தல் வேண்டும். | பாடவிதானத்தை பல் வகைப்படுத்தல், தேவைப்பாட்டின் பிரகாரம் பாடங்களை மேம்படுத்தல், முன்னுரிமை வழங்கக்கூடிய பாடங்களை கற்பிப்பதற்காக தேவையான மனித பௌதீக மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல் 13 ஆம் ஆண்டின் சான்றுபடுத்தப்பட்ட கல்விக்கொள்கை பரீட்சைகள் மற்றும் கற்பித்தல் முறைமை தொடர்பான மறுசீரமைப்பு முதலிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ii) | 1991 ஏப்ரல் 19 ஆம் திகதிய 1981 இன் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தேசிய ஆணைக்குழுவினால் 1992, 2003 மற்றும் 2016 ஆம் ஆடுகளின் போது சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையும் தேசிய கல்விக் கொள்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (iii) | 13 ஆவது அரசியலமைப்புக்கான திருத்தத்தின் 111 ஆவது அத்தியாயத்தில் கல்விக்குரிய 2 ஆவது உறுப்புரையின் பிரகாரம் முன்பள்ளிகளை மேற்பார்வை செய்தல் மற்றும் முகாமைத்துவம் செய்யும் உரிமை கல்வி அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் கல்வி அமைச்சின் பிரதான செயற்பாடாக இனங்காணப்பட்டுள்ள முன்பள்ளிகளுக்கான தேசியக் கொள்கையை தயாரித்து | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | அமுல்படுத்துதல் இடம்பெற்றிருக்கவில்லை. | | |
| **(ஆ)** | **கல்வி மறுசீரமைப்பு** | | |
| (i) | 2017 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் தேசிய கண்காணிப்பு அதிகாரசபையினைத் தோற்றுவித்து அதன் குறிக்கோளிடப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை முடியாதிருந்தது. | கல்வி மறுசீரமைப்பிற்காக குறிக்கோளிடப்பட்ட செயற்பாடுகளை உறுதியாக நிறைவேற்று வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பித்து அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதற்கிணங்க கல்வியை பிரசித்தப்படுத்தல் சபையைத் தோற்றுவிப்பதற்கும் பதவியணியினர் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் மீண்டும் அமைச்சரவைக் குறிப்பை வரைபாக்கி கௌரவ கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ii) | தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை மேம்படுத்துவத்றகுரிய கொள்கைப் பத்திரத்தையும் தெரிவு செய்யும் வரையறைகளையும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான தகவல்கள் காணப்படவில்லை. | உரிய வரையறைகளை அறிமுகப்படுத்தி காணப்படுகின்ற தேசிய பாடசாலைகளை உச்ச அளவு தரத்துடன் செயற்படுத்து வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட தேசிய பாடசாலைக் கொள்கை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் புதிய தேசிய பாடசாலைகளைத் தோற்றுவிப்பதற்கும் தற்பொழுது மாகாண சபைகளின் கீழுள்ள அரசாங்க பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்துவது சம்பந்தமான தேசிய கொள்கை 2019 மே 09 ஆந் திகதி அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| **(இ)** | **பாடசாலைகளை ஆரம்பித்தலும் மூடுதலும்** | | |
| | 2018 ஆம் ஆண்டிற்கான புள்ளிவிபர பதிவேட்டு அறிக்கையின் பிரகாரம் 21 மாவட்டங்களில் 101 பாடசாலைகள் மூடப்பட்டிருந்ததுடன் அவற்றில் 31 பாடசாலைகள் போதியளவு எண்ணிக்கையான மாணவர்கள் இல்லாததின் காரணமாகவும் 45 | புதிய பாடசாலைகளை ஆரம்பிப்பதனைப் போல பாடசாலைகளை மூடுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளை | பதில்களை பின்னர் சமர்ப்பிப்பேன் |

பாடசாலைகள் நாட்டில் நிலவும் நிலைமைக்கு இணங்கவும், 21 பாடசாலைகள் காரணம் அறிவிக்கப்படாத நிலையின் கீழும், 4 பாடசாலைகள் ஏனைய காரணங்களின் கீழும் மூடப்பட்டிருந்தன. இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(i) போதியளவு எண்ணிக்கையான மாணவர்கள் இல்லாததன் காரணமாக மூடப்பட்டுள்ள 31 பாடசாலைகளில் காணப்பட்ட 10 பாடசாலைகள் கட்டமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கோவையின் 3.2.6 ஆம் பந்திக்கு இணக்கமற்ற வகையில் மூடப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) 78 பாடசாலைகளில் முதலாம் தரத்திற்காக 2019 ஆம் ஆண்டிற்காக எந்த விண்ணப்பமும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

(iii) 2018 ஆம் ஆண்டின் போது 38 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டிருந்ததுடன் மூடப்பட்ட பாடசாலைகளின் மரத்தளபாடங்கள், உபகரணங்கள், கட்டிடங்கள் முதலிய சொத்துக்கள் சம்பந்தமாக தெளிவான கொள்கை காணப்படவில்லை

(iv) தேசிய கல்விக் கொள்கைக்கு இணங்க சர்வதேச பாடசாலைகளை மேற்பார்வை செய்தல் அமைச்சின் குறிக்கோள்களுக்கு மத்தியில் ஒரு குறிக்கோளாகும். 1961 இன் 8 ஆம் இலக்க மூன்றாம் நிலை பாடசாலைகள் மற்றும் பயிற்சிகள் கல்லூரி (மேலதிக ஏற்பாடு) அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் 5 வயதிற்கும் 14 வயதிற்கும் இடைப்பட்ட வயது எல்லையை அடைந்த மாணவர்களுக்கு கல்வியை வழங்குவதற்காக எந்த நபரினாலும் தனியார் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாது என்ற போதிலும் நிகழ்காலத்தில் விரைவாக வளர்ந்து வரும் தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகள் தொடர்பாக முறையான மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்துதல் மேற்கொள்ளுதல் அத்தியாவசதியமான விடயமாக கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1961 இன் 08 ஆம் இலக்க மூன்றாம் நிலை பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (மேலதிக ஏற்பாடு) அதிகாரச்சட்டத்தின் 25(1) ஆம் பிரிவில் குறிப்பிட்ட சட்ட ஏற்பாடுகளை திருத்தம் செய்வதற்கு 2001 ஆம் ஆண்டிலிருந்து அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததும் இதுவரை அந்த ஏற்பாடு மாற்றமின்றிக் காணப்பட்டது.

உரிய சட்ட ஏற்பாடுகளை திருத்தம் செய்து தேவையான பிரமாணங்களை

| | | |
|---|---|---|
| அதிகாரச்சட்டத்துக்கு இணக்கமற்ற வகையில் சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | | உருவாக்கியதன் பின்னர் தேசிய கல்விக் கொள்கைக்கு இணங்க சர்வதேச பாடசாலைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் சர்வதேச பாடசாலைகளையும் தனியார் பாடசாலைகளையும் முறைமைப்படுத்துதலை மேற்கொள்ளலாம். |
| (உ) 11 ஆம் தரம் வரை ஆண் மாணவர்களை இருக்க வைக்கும் சதவீதம் 2017 ஆம் ஆண்டில் 87 சதவீதத்திலிருந்து 2018 ஆம் ஆண்டில் அதனை 88 சதவீதம் வரை அதிகரிக்கும் இலக்கிற்காக 24 நடைமுறைகள் திட்டமிடப்பட்டிருந்தன. அவற்றில் 08 நடைமுறைகள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | கல்வி அமைச்சில் நடைமுறைகளைத் திட்டமிடும் போது பிரதான செயலாற்றல் குறிகாட்டியாக இனங் காணப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2017 வரவு செலவு திட்ட பிரேரணையின் பிரகாரம் அரசாங்கத்தின் ஆசிரியர் சம்பளங்களைப் பெறுகின்ற அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு அக்ரஹார காப்புறுதி முறைமையின் நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய நடைமுறைகளைப் பின்பற்றாமை தொடர்பான பதில்களை பின்னர் சமர்ப்பிப்பேன். |

## 3.3 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| அறிவுத்துறையின் அடிப்படையாக பாடசாலை கல்வி முறைமையை மீளமைப்புச் செய்யும் செயற்திட்டத்திற்காக பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் பந்திக்கு முரணாக மடிக்கணனி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன்போது வழங்குனர்களை முறைப்படியாக தெரிவு செய்யாமை, உரிய வழங்குனர்கள் வழங்கல் நிபந்தனைகளை மீறுதல், ஆசிரியர் தொழிலின் அபிவிருத்திக்கான கையேடும் கையேட்டினை அச்சிடாமையும் நிர்மாண மற்றும் திருத்துதல் நடவடிக்கைகளை | வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் குறிக்கோள்களை அடைந்து கொண்டு அந்த உதவியை முகாமைத்துவம் செய்து வினைத்திறனாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த இரண்டு பெறுகைச் செயற்பாடுகளையும் ஒன்றுசேர்க்கையில் 33 குறைநிரப்புகளில் குறிப்பிட்ட உச்ச எல்லையான பதினெட்டு மில்லியனை மிகைத்துள்ளது என்பதனை ஏற்றுக்கொள்கின்றேன்.<br><br>உலக வங்கி செயற்திட்டத்தின் உடன்படிக்கை காலப்பகுதி முடிவடைந்த திகதியான 2018 யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் |

| | | |
|---|---|---|
| தாமதித்தலும் மதிப்பீட்டு பெறுமதிக்குள் நடவடிக்கை எடுக்காமையும் முதலிய குறைபாடுகள் காணப்பட்டன. கற்றலை மேம்படுத்துவதற்கு பாடசாலைகளுக்கு வழங்கபப்படுகின்ற அவசியத்தன்மை மற்றும் முன்னுரிமையின் பிரகாரம் இனங்காணல் மற்றும் அச் செயற்திட்டங்களை 2018 யூன் 30 ஆந் திகதி பூர்த்தி செய்ததன் பின்னர் எஞ்சியுள்ள ரூபா 129.27 மில்லியன் பணத்தை திட்டமின்றி பாடசாலைகளுக்கு பகிர்ந்தளித்தல் ஆகிய குறைபாடுகளும் காணப்பட்டன. | | பெறுகைக் காலத்தை பூர்த்தி செய்யும் குறிக்கோளுடன் அமைச்சு களஞ்சியத்திற்கு பொருட்களைப் பொறுப்பேற்று பெறுகைகளை முடிவுறுத்தி கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன. பின்னர் பொருட்களைப் பகிர்ந்தளிக்கும் போது தாமதங்கள் ஏற்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக்கொள்கின்றேன். |

### 3.4 உள்நாட்டு நிதிகள் ஈடுபடுத்திய செயற்திட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் செயற்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட, வேண்டப்பட்ட மற்றும் கிடைத்த நிதி ஏற்பாடுகள் முறையே ரூபா 22.086 மில்லியன் ரூபா 34.542 மில்லியன் மற்றும் ரூபா 13.129 மில்லியனாக இருந்ததனால் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை ஈடுபட்டிருக்கவில்லை.<br><br>மத்திய மாகாணத்தில் 04 நிர்மாண ஒப்பந்தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 1.76 மில்லியன் தொகையான 02 கேள்வி பிணைகளும் செயலாற்றல் பிணைகளும் போலியானவைகளாக இருந்ததுடன் ரூபா 7.26 தொகையான 02 பிணை முறிகள் கால நீடிப்புச் செய்யப்பட்டன. என்பதற்கு பிழையான சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டன. நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்ட மற்றும் பௌதீக | | அவதானிப்புக்களில் குறிப்பிடப்பட்ட பாடசாலைகளில் இதில் கூறப்பட்ட தேபைப்பாடுகளின் முன்னுரிமை கோரப்படடதானது தொடக்கத்தில் திட்மிடப்பட்டவாறு செயற்திட்டத்திற்கு மேலும் நிதி ஏற்பாடுகள் பெற்றுக்கொள்வதனை கவனத்திற்கு எடுத்துக்கொள்வதாக இருந்தபோதிலும் ஊழியர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட முன்னுரிமைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. தொடக்க நிதி ஏற்பாட்டுத் திட்டத்தில் பாடசாலைகளின் தேவைப்பாடு தீர்மானிக்கப்பட்டிருந்தும் அப்போதிருந்த மாகாண கல்வி உத்தியோகத்தர்களிடமிருந்தும் அதிபர்களிடமிருந்தும் கருத்துக்கள் விசாரிக்கப்பட்டதன் பின்பே தேசிய பாடசாலைகளில் |

| | | | |
|---|---|---|---|
| | செயல் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 73.01 மில்லியன் தொகையான 02 செயற்திட்டங்களும் ரூபா 7.14 மில்லியன் பெறுமதியான நிர்மாண வேலைகள் தரம் குறைந்தவையாக இருந்தமை மற்றும் பொருத்தமற்ற இடங்களில் நிர்மானிக்கப்பட்டதன் காரணமாக நிலைத்திருத்தலானது சர்ச்சைக்குரியதாக இருந்தது. 03 ஆண்டுகளுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 38.16 மில்லியனான கட்டிடத்திற்கு தேவையான உபகரணங்கள் வழங்கப்படாமையால் விளைவற்றுக் காணப்பட்டன. | | அதிபர்களுக்கு நடாத்தப்படுகின்ற செயலமர்வுகளின் போது அவர்களின் நன்நடத்தைகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.<br><br>வருடாந்த பாடாசலை மேற்பார்வை திட்டத்தை தயாரித்தன் பின்னர் நிவேற்றப்படுகின்ற மேற்பார்வையின் மூலம் பாடசாலைகளின் தரங்கள் சம்பந்தமாக விசேடமாக விசாரித்து அறியப்படும். |
| (ஆ) | சுரக்சா மாணவர் காப்புறுத்தித்திட்டம்<br>------------------------------------------------------ | | |
| | 5 வயதிலிருந்து 19 வயது வரையான வயது தொகுதியை அடைந்த 4.5 மில்லியன் மாணவர்களுக்கு ஒவ்வொரு மாணவனுக்கும் ரூபா இரண்டு இலட்சம் காப்புறுதித் திட்டத்திற்காக 2017 செப்தெம்பர் 07 ஆந் திகதி கல்வி அமைச்சிற்கும் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்குமிடையே முதல் தடவையாக கையெழுத்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஒக்டோபர் 01 ஆந் திகதியிலிருந்து 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி வரியுடன் ரூபா 2700 மில்லியனாகும். உடன்படிக்கை செய்யப்பட்ட கால எல்லை 2018 நவம்பர் 30 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் 2017 நவம்பரிலிருந்து 2018 நவம்பர் 30 வரை உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதியில் 18.96 சதவீதம் மாத்திரம் காப்புறுதி நலன்களாக மாணவர்களுக்குச் செய்யப்பட்டிருந்தது. | அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் இலகுவாக காப்புறுதி நலன்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் ஒரு வேலைத்திட்டத்தை உருவாக்குதல் வேண்டும். | 2017 ஒக்தோபர் 01 ஆந் திகதியிலிருந்து 2018 நவம்பர் 30 ஆந் திகதி வரை காப்புறுதிக் கோரிக்கைக்காக 47,029 வேண்டுதல்கள் கிடைத்திருந்ததுடன் அவற்றில் 40978 வேண்டுதல்களுக்கான நலன்களாக ரூபா 512.16 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. 2018.12.01 ஆந் திகதியிலிருந்து 2019.11.30 வரை சுரக்சா மாணவர் காப்புறுதித் திட்டத்திற்கான உடன்படிக்கை அலியான்ஸ் லங்கா தனியார் கம்பனியுடன் 2019.04.03 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. |

**3.5 முகாமைத்துவ பலவீனம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தில் குறிப்பிட்ட பெறுமதியில் 79.45 சதவீதமான ரூபா 14152.6 மில்லியன் பெறுமதியான 35 விடயங்கள் பூரணப்படுத்தப்படாதிருந்ததுடன் ரூபா 204.2 மில்லியன் பெறுமதியான 10 விடயங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. | ஆண்டில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்து எதிர்பார்த்த செயல்முன்னேற்றங்களையும் விளைதிறனையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) | தேசிய பாடசாலைகளுக்காக அதிபர்களைச் சேர்த்துக்கொள்ளும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டிருந்ததுடன் கல்வி அசைமச்சின் 23/2011 ஆம் இலக்க சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவை குழு செயலாளரின் கடிதத்தினால் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க அதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 1,153,655 பணம் சிக்கனமற்ற செலவாக இருந்தது. | தேசிய பாடசாலை அதிபர்களை நிரந்தரமாக நியமிப்பதற்கும் பல ஆண்டுகளாக தீர்த்துவைக்கப்படாதுள்ள அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் விரைவாக கவனம் செலுத்துதல் வேண்டும். | நேர்முகப் பரீட்சைக்கான அறிவித்தல்கள், உணவுகள், படிகள் என்பனவாக ரூபா 736,000 செலவு செய்யப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் நேர்முகப் பரீட்சையின் போது ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்ப பாடங்களிலுள்ள இயலுமை கவனம் செலுத்தப்பட்டது. 3 ஆம் வகுப்பில் 1,918 உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் நியதிச்சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பதவியுயர்வுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மொழித்தேர்ச்சி பூரணப்படுத்தப்படாததன் காரணமாக II ஆம் தரத்திலிருந்து I ஆம் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கு முடியாதிருந்தது. |
| (இ) | 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை கல்வி நிர்வாக சேவையிலுள்ள 11 உத்தியோகத்தர்கள் குழாம் | முறையாக ஒழுக்காற்று மற்றும் புலனாய்வு நடவடிக்கை | 2015 இலிருந்து 2018 திசெம்பர் வரையான காலத்தில் 10 கல்விப்பணிப்பாளர் பதவியணியினர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவிற்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவர்களுக்குரிய ஒழுக்காற்று விசாரணைகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதுவரை கல்வி நிர்வாக சேவையின் பதவிகளில் 10 வெற்றிடங்கள் காணப்பட்டன. | எடுக்கப்பட வேண்டியதுடன் அப் பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அப் பதவிக்காக எதிர்காலத்தில் முறைப்படியாக உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல்<br>-------------------------------------------------------------- | | |
| (i) | தொழில் வல்லுனர்களின் அல்லது உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு பிரசித்தமான பாடசாலைகளில் சேர்த்துக்கொள்வது சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்ட வரையறை, நடைமுறை அல்லது ஆலோசனை இருக்கவில்லை. சில தொழில்வல்லுனர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்காக மாத்திரம் அதற்காக சந்தர்ப்பம் கிடைத்திருந்ததுடன் அது சம்பந்தமாக பொது கொள்கை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. | பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக பொதுவான நடைமுறையை மற்றும் கொள்கையை வகுப்பதன் மூலம் அனைத்து மாணவர்களுக்கும் சமமான வாய்ப்பினை உருவாக்குதல் வேண்டும். | கல்வி அமைச்சரின் விசேட அங்கீகாரத்தின் கீழ் (இடமாற்றத்தின் அடிப்படையில்) பல்வேறு தொழில் வல்லுனர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளை அடிப்படையாகக் கொண்டு பிரசித்தி பெற்ற பாடசாலைகளுக்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றார்கள். அதன்மூலம் பாடசாலைகளுக்கு எல்லைகளை மீறி மாணவர்களைச் சேர்த:துக்கொள்ள வேண்டி ஏற்படுகின்றது என விசேடமாகக் குறிப்பிடுகின்றேன். எதிர்காலத்தில் இதற்காக பொது சுற்றறிக்கையினைத் தயாரிப்பதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ii) | கல்வி அமைச்சு செயலாளரின் 2008 செப்தெம்பர் 19 ஆந் திகதிய 2008/37 ஆம் இலக்க சுற்றறிக்கையில் தரப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு தேசிய பாடசாலையில் ஆரம்பத்தரங்களில் சமமான வகுப்புக்களில் இருக்கக்கூடிய உச்ச அளவு மாணவர்களின் எண்ணிக்கை 40 மற்றும் இரண்டாம் தரங்களில் சமாந்தர வகுப்புக்களில் இருக்கக்கூடிய | பாடசாலைகளில் காணப்படுகின்ற வசதிகளுக்கு மிகையாகவும் சுற்றிக்கை அறிவுறுத்தல்களில் குறிப்பிட்ட எல்லைகளுக்கு மிகையாகவும் இடைத்தர வகுப்புக்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு | தேசிய பாடசாலைகளில் இடைத் தரங்களுக்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு விடுவிக்கப்பட்ட வேண்டுதல்கள் அப்பாடசாலைகளில் அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு 1,5,6 தரங்களைத் தவிர்த்து இடைத்தரங்களில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் பிரகாரம் 2008/37 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | உச்ச அளவு மாணவர்களின் எண்ணிக்கை 45 என்ற எல்லை குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 2016 மே 16 ஆந் திகதிய 17/2016 ஆம் இலக்க திருத்திய சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் முதலாம் தரத்தில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக வகுப்புக்களுக்கு சேர்த்துக்கொள்ளக்கூடிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 39 ஆகக் காட்டப்பட்டிருந்தது. தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டவாறு இந்த எல்லையை மிகைத்து 2017 ஆம் ஆண்டின் போது 109 தேசிய பாடசாலைகளில் 6337 மாணவர்களும் 73 பாடசாலைகளில் 3339 மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். | உள்ள வாய்ப்புக்களைக் குறைப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கை எடுத்தல் வழக்கமான நடைமுறையாகும். கல்வி அமைச்சின் விசேட அங்கீகாரத்தின் கீழ் (இடமாற்றத்தின் அடிப்படையில்) பல்வேறு தொழில் வல்லுனர்களை அடிப்படையாகக் கொண்டு பிரசித்திபெற்ற பாடசாலைகளுக்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அதன்மூலம் பாடசாலைகளுக்கு எல்லைகளை மீறி மாணவர்களைச் சேர்த:துக்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது என விசேடமாகக் குறிப்பிடுகின்றேன். 2019 ஆம் ஆண்டில் இடைத்தரங்களுக்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுதலை கல்வி அமைச்சின் பணிப்புரையின் அடிப்படையில் தற்காலிகமாக நிறுவத்தி வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (உ) | உடல் மற்றும் உள சமத்துவத்துடனான சுகதேகி பிரசையை நாட்டுக்கு வழங்கும் விளையாட்டுக்களில் திறமையுள்ள மாணவர்களை திறமைமிக்க விளையாட்டு வீரர்களாக மாற்றுவதற்கான கல்வி அமைச்சின் செயற்திட்ட பிரேரணையின் பிரகாரம் தேசிய கொள்கை அமுலாக்கல் திணைக்களத்தின் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மாணவர்களின் உடல் பொருத்தத் தன்மையை மேம்படுத்துவதற்கான 7 குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆம் ஆண்டிலிருந்து அடுத்துவரும் 5 ஆண்டுகளுக்குள் அமுல்படுத்துவதற்காக ரூபா 18,394.5 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது இந்த நிகழ்சசித்திட்டம் அமுல்ப்படுத்தப்படாதிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 250 மில்லியன் நிதி ஏற்பாடும் 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 300 மில்லியன் நிதி ஏற்பாடும் கிடைத்திருந்தது. 2018 ஆம் ஆண்டிற்கு கிடைத்த ரூபா 300 | தேசிய தேவைப்பாடாகக் கருதி உடல் மற்றும் உள சமத்துவ கல்வி முறைமையைத் தோற்றுவிப்பதற்காக அனைத்து மாணவர்களின் உடல் பொருத்தத்தன்மையை மேம்படுத்துவதற்காக குறிக்கோளிடப்பட்டவாறு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விளையாட்டுக்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக 2019 – 2025 வரையான செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்து சமர்ப்பித்தல், விளையாட்டுக்கள் பாடசாலைகளின் அதிபர்களுடன் ஆலோசனைகளை அமைத்து அவற்றின் செயற்திறன் மற்றும் குறைபாடுகள் சம்பந்தமாக சரியான அறிக்கையை வழங்குதல் அனைத்து பாடசாலைகளிலும் விளையாட்டுக்கள் தொடர்பான தேவைப்பாடுகள் சம்பந்தமான தகவல் கோவைகளைத் தயாரித்து சமர்ப்பித்தல். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனில் ரூபா 99 மில்லியன் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | 112 தேசிய பாடசாலைகள் மற்றும் 704 மாகாண பாடசாலைகளில் காணப்படுகின்ற விசேட கல்விப் பிரிவில் 10,284 மாணவர்கள் கல்வி கற்பதுடன் அப்பிரிவில் 1,189 ஆசிரியர்கள் மற்றும் ஒன்பது மாணவர்கள் தொடர்பாக 597 ஆசிரியர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. ஏனைய பாடசாலைகளுக்காக நியமனங்கள் பெற்ற 158 பேர் கற்பித்துவருவதுடன் விசேட கல்விப்பிரிவிற்காக நியமனங்கள் பெற்ற 189 ஆசிரியர்கள் விசேட பிரிவுகள் இல்லாத பாடசாலைகளிலும், 54 பேர் விசேட பிரிவுகள் இருந்தும் ஏனைய வ குப்புகளுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.<br>இரத்தினபுரி இயேசு குழந்தையின் கன்னிமடம் தேசிய பாடசாலையில் குறைபாடுகளுடன் 98 மாணவர்கள் இருந்தும் பாடசாலை ஒரு விசேட கல்விப் பிரிவை தோற்றுவிக்காதிருந்ததுடன் விசேட கல்விக்காக இருக்கின்ற ஒரே ஆசிரியரும் எம்பிலிமிடிய மத்திய மகா வித்தியாலயத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார். | விசேட கல்விப் பிரிவில் கல்வி கற்கின்ற விசேட தேவைப்பாடுகளுடனான மாணவர்களுக்கு கற்பிப்பதற்காக விசேட பயிற்சிகள் பெற்ற ஆசிரியர்களை போதியளவில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வெற்றிடங்களுக்காக சேர்த்துக்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளது. 2012 நவம்பர் 23 ஆம் திகதிய 44/2012 ஆம் இலக்க சுற்றிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத ஆசிரியர்களின் சம்பள அதிபரிப்புக்களை நிறுத்துவதற்கும் 2017 மே 17 ஆந் திகதிய ED/9/18/8/2/6 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் கடிதத்திலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரத்தினபுரிய இயேசு குழந்தை கன்னியர்மடம் தேசிய பாடசாலையில் விசேட கல்விப் பிரிவு தோற்றுவிக்கப்படவில்லை. |
| (எ) | தேசிய பாடசாலைகளில் நடவடிக்கைகள்<br>----------------------------------------------------------------- | | |
| (i) | 113 தேசிய பாடசாலைகளில் 1069 பாடங்களுக்காக காணப்பட்ட 1359 ஆசிரியர் பற்றாக்குறைகளும் 584 பாடங்களுக்காக காணப்பட்ட 898 மிகைகளையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 115 தேசிய பாடசாலைகளில் 8 ஆண்டுகளை மிகைத்து 2276 ஆசிரியர்கள் காணப்பட்டனர். | ஆசிரியர் பற்றாக்குறைகள் மற்றும் மிகைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டியதுடன் வருடாந்த இடமாற்ற முறைமையை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br><br>விசேட பாடங்களுக்காக நியமனங்கள் பெற்றுக் | ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது ஏற்பட்டுள்ள சிக்கல்கள், புதிய பாடங்களுக்கான ஆசிரியர்களை வழங்கும் சிக்கல்கள் மற்றும் புதிய ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது சில பாடங்களுக்கு போதியளவில் ஆசிரியர்கள் இல்லாமையின் காரணமாக பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையும் மிகைகளும் ஏற்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டிலிருந்து பாடங்களுக்கு இணங்க செம்மைப்படுத்தி |

| | | | |
|---|---|---|---|
| | | கொள்ளப்பட்ட ஆசிரியர்களுக்கு அப் பாடங்களை ஒப்படைத்தல் மற்றும் ஆரம்ப பயிற்சியைப் பெற்ற ஆசிரியர்களை அத்தரத்திற்காக இணைத்துக்கொள்ளல் வேண்டும். | இடமாற்றங்களைச் செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 118 சேிய பாடசாலைகளில் 107 பாடசாலைகளின் 601 ஆசிரியர்களுக்கு நியமனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட பாடங்களுக்குப் புறம்பான பாடங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 21 பாடசாலைகளின் ஆரம்ப தரங்களுக்கு ஆரம்ப ஆசிரியர் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளாத 44 ஆசிரியர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். | பாடசாலைகளுக்கு போதியளவு கல்விசாரா பதவியணியினர்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அப்பதவியணியினர்களை உச்ச அளவில் சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சில தேசிய பாடசாலைகளுக்காக கல்வி அமைச்சின் மூலம் ஈடுபடுத்தப்பட்டுள்ள கல்வி சாரா பதவியணியினர்களின் அளவு போதிய அளவில் இல்லாததனால் பாடசாலை அபிவிருத்திச் சங்களங்களின் மூலம் சம்பளங்கள் செலுத்தும் அடிப்படையில் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு கல்வி அமைச்சின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. |
| (iii) | பிரதி மற்றும் உதவி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக ஒரு வாரத்திற்கு ஒதுக்கப்பட வேண்டிய காலப்பகுதிகளின் எண்ணிக்கை முறையே 10 – 12 மற்றும் 35 ஆக இருக்க வேண்டியபோதிலும் 2018 ஆம் ஆண்டின் போது மாத்திரம் எதவித செயற்பாடுகளும் ஒப்படைக்கப்படாத ஆசிரியர்களின் எண்ணிக்கை முறையே 139, 42 மற்றும் 549 ஆகும். | | பாடசாலை அபிவிருத்தச் சங்கங்களின் மூலம் சம்பளங்கள் செலுத்தும் அடிப்படையில் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக கல்வி அமைச்சின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>தேசிய பாடசாலைகளின் அதிபர்களை குழுக்களாக அழைத்து நிதிச் செயற்பாடுகள் சம்பந்தமாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (iv) | 118 தேசிய பாடசாலைகளில் 30 பாடசாலைகளின் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களால் சம்பளங்கள் செலுத்தும் 90 கல்விசாரா பதவியணியினர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் போது அவர்களுக்குச் செலுத்தப்பட்ட மொத்த பணம் ரூபா 11.78 மில்லியனாகும். | | பிரதி அதிபர்களுக்கு கற்பித்தல் தொடர்பான காலப்பகுதி சம்பந்தமாக 2018 யூன் மாதம் 22, 25, 28 மற்றும் யூலை மாதம் 02 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட கல்வி பதவியணியினர்களை நிர்ணயிக்கும் செயலமர்வின் போது அனைத்து தேசிய பாடசாலைகளின் அதிபர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| (v) | 118 தேசிய பாடசாலைகளில் 102 பாடசாலைகளின் கல்விசாரா | | |

| | | | |
|---|---|---|---|
| | பதவியணியில் 1034 அங்கத்தவர்களின் பற்றாக்குறைகள் காணப்பட்டன. | | |
| (vi) | ஆகக் குறைந்த மாணவர் எண்ணிக்கை காணப்படுகின்ற குறிப்பிடத்தக்க அளவான பாடசாலைகள் காணப்படுகின்றன. 118 தேசிய பாடசாலைகளில் 42 பாடசாலைகள் மாத்திரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்புக்களில் ரூபா 149.25 மில்லியன் தொகையை வைப்புச் செய்துள்ளன. | | |
| (ஏ) | பாடசாலைகளை நிர்மாணப்பதற்காக ஒரே ஒப்பந்தகாரர் தொகுதி தெரிவுசெய்யப்பட்டதன் காரணமாக அப்பாடசாலைகளில் ரூபா 106.6 மில்லியன் தொகையான நிர்மாண வேலைகளில் வழமைக்கு மாறாமான தாமதங்களும் குறைபாடுகளும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டன. | ஒரே ஒப்பந்தகாரருக்கு அதிகளவு எண்ணிக்கையான நிர்மாண வேலைகளை ஒப்படைக்காதிருக்க வேண்டியதுடன் உரிய காலப்பகுதிக்குள் ஒப்பந்தத்தை ஒப்படைத்தல் மற்றும் திட்டமிடலின் பிரகாரம் செயற்படுதல் தொடர்பாக மேற்பார்வை செய்தல் வேண்டும். | இரத்தினபுரி சீவலி வித்தியாலயத்தின் நிர்மாணங்களின் பெறுகைகளுக்குப் பொறுப்பான சப்ரகமுவ மாகாண கல்விப் பணிப்பாளரிடம் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் வழங்கிய பதில்களை பூரணப்படுத்தி மீண்டும் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. சப்ரகமுவ மாகாண கல்விப் பணிப்பாளர் கலந்துரையாடுவதற்காக அமைச்சிற்கு அழைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (ஐ) | கடந்த சில ஆண்டுகளில் தகவல் மற்றும் தொடர்பாடல் பாடத்திற்காக தோற்றியுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்கு அண்மித்த எண்ணிக்கையானவர்கள் சித்தியடையாதிருந்தார்கள். பரீட்சைத் திணைக்களத்தின் புள்ளிவிபரத்தின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் போது உயர்தரப் பாடங்களாக பௌதீக விஞ்ஞானம், இரசாயனவியல், இணைந்த கணிதம், தர்க்கவியலும் விஞ்ஞானமுறையும், தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் என்பவற்றை கற்கின்ற மாணவர்களிலும் 1/3 பங்கிற்கு அண்மித்த அளவானவர்கள் சித்தியடைந்திருக்கவில்லை.<br><br>எவ்வாறாயினும் அதற்கான | ஒட்டுமொத்த பெறுபேறுகளை மதிப்பீடு செய்ததன் மூலம் கட்டமைப்பில் காணப்படுகின்ற குறைபாடுகளை இனங்கண்டு முறையான ஆய்வுகளின் பின்னர் அதனை சரிசெய்வதற்கு தேவையான பரிகாரத்தை ஈடுபடுத்துதல் வேண்டும். பாடங்களைக் கற்பதற்காக போதியளவு எண்ணிக்கையான ஆசிரியர்களை இணைத்துக்கொள்ளல் | 2017 ஆம் ஆண்டில் பௌதீக விஞ்ஞான பாடத்தில் சித்தியடையாத மாணவர்களின் அளவு 32.64% இரசாயன விஞ்ஞான பாடத்தில் சித்தியடையாத மாணவர்களின் அளவு 30.83% இணைந்த கணிதத்தில் சித்தியடையாத மாணவர்களின் அளவு 33.94% தர்க்கவியல் மற்றும் விஞ்ஞான முறைமையில் தர்க்கவியல் மற்றும் விஞ்ஞான முறைமையில் சித்தியடையாத மாணவர்களின் அளவு 33.45% மற்றும் தொழில்நுட்ப பந்திக்கான விஞ்ஞானத்தில் சித்தியடையாத மாணவர்களின் அளவு |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக இருந்த விடயங்களை இனங்காண்பதற்கும் அதற்கான பரிகாரத்தை ஈடுபடுத்துவதற்குப் பொருத்தமான முறையான ஒரு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆங்கில இலக்கியம், பிரஞ்சு, ரஷ்யா, ஜப்பான் ஆகிய மொழி ஆசிரியர்களின் 52 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் ரஷ்யா மற்றும் ஜப்பான் மொழிகளுக்காக கடந்த ஐந்து ஆண்டுகள் காலத்தில் ஆசிரியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டுவரை ஆங்கில இலக்கிய ஆசிரியர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதும் ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படாமையும் மாணவர்களின் கல்வி மட்டத்தின் வீழ்சிசக்கு காரணமாக இருந்தது. | தேவையான வகையில் ஆசிரியர் பயிற்சிகளை வழங்குதல் மற்றும் பாடங்களை கற்பிப்பது தொடர்பாக மேற்பார்வை செய்வதன் மூலம் பாட சிக்கல்களை இனங்கண்டு அதற்கிணங்க தரமான பாடங்களை கற்பித்தல் இடம்பெறுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு தேவையான பரிகாரங்களை ஈடுபடுத்துதல் வேண்டும். | மற்றும் 29.67% ஆகும். சித்தியடையாத சதவீதத்தை கருத்திற் கொள்கையில் ஒவ்வொரு பாட பகுதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் உரிய உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஒ) | நாட்டில் காணப்படுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கையான 10162 இல் நிரந்தர நூல் நிலைய வசதிகள் உள்ள பாடசாலைகள் 3,499 ஆகவும் தற்காலிக வாசிப்புகள் உள்ள பாடசாலைகள் 2185 ஆகவும் தற்காலிக நூல்நிலையம் உள்ள பாடசாலைகள் 3314 ஆகவும் உள்ளன. பாடசாலைகளில் 34 சதவீதத்திற்கு மாத்திரம் நிரந்தர நூல்நிலையங்கள் காணப்படுவதுடன் 1164 பாடசாலைகளுக்கு நூல் நிலையமோ அல்லது அதற்கு சமமமான வாசிப்பு வசதிகளோ இல்லாதிருந்தன. அமைச்சினால் 3 கட்டங்களின் கீழ் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 3.63 மில்லியன் செலவு செய்து 9 மாணவர்களின் 98 வலயங்களின் நூல்நிலைய விடயத்திற்குப் பொறுப்பான 80 பணிப்பாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டிருந்தும் இப்பயிற்சியின் விளைதிறன் மாகாண உத்தியோகத்தர்களினூடாக பாடசாலைகளுக்கு கிடைத்திருக்கவில்லை. பாடசாலைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள நூலகர்கள் 2,607 | அனைத்து மாணவர்களுக்கும் நூலக வசதிகளை மேம்படுத்துவதற்கும் தகமைகள் உள்ள உத்தியோகத்தர்களை நூலகத்திற்காக இணைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அ) மாணவர்கள் எண்ணிக்கை குறைந்த சிறிய பாடாசலைகளுக்கும் வகுப்பறைகள் நூலகங்கள், நூலக அலுமாரிகள் புத்தக பெட்டிகள் ஆகிய பல்வேறு வாசித்தல் நடைமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் வாசிப்பதற்கான புத்தகங்களின் அளவு பேணப்படுகின்றது.<br>ஆ) உத்தியோகத்தர்களுக்கான பயிற்றுவித்தல்களின் பெறுபேறுகள் அதற்கு கீழ் தரங்களிலுள்ளவர்களுக்கு கசிந்து செல்வதால் இடம்பெறுவதாவது மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற செயலமர்வுகள் மற்றும் நூல்நிலையம் பரிசோதனைகளின் போதாகும். இதற்காக சில காலம் எடுக்கும்.<br><br>இ) புதிய |

| | | | |
|---|---|---|---|
| | பேரில் 1,906 பேர் நூலகர் பதவிகளுக்கான எதுவித தகமைகளையும் பெற்றிருக்கவில்லை. | | ஆட்சேர்ப்புக்களுடன் உங்களால் கட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் சரிசெய்யப்படும். |
| (ஓ) | 2001 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சிசு அருண செயற்திட்ட நிதியத்தின் குறிக்கோள்களின் பிரகாரம் ரூபா 2.5 மில்லியன் பெறுமதி பூரணமடைகையில் புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். 2015 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 2.6 மில்லியனாக இருந்ததுடன் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 4.4 மில்லியனை மிகைத்திருந்தபோதிலும் பணம் நிதியத்தில் இருந்தும் புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு 2019 ஆம் ஆண்டுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>அமைச்சின் உத்தியோகத்தர்களின் மேற்பார்வை இல்லாததானல் மாணவர்கள் அக்கம்பனியின் பெயரை பதிவழித்திருந்தனர். | நிதியத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட அடிப்படைக் குறிக்கோளான புலமைப்பரிசில்களை வழங்குவதற்கான தேவையான நடவடிக்கை வழங்கப்படுதல் வேண்டும். | கம்பனிகள் பெயர் பதிவழிக்கப்பட்டிருந்தமையால் அதற்குரிய ஆதனம் மற்றும் உரிமையாண்மை பொதுத் திறைசேரிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தை விசாரித்த போது உரிய அதிகாரிகளுடன் செயற்பட்டு மேற்கூறிய கம்பனியை மீண்டும் தோற்றுவித்தல் அல்லது உரிய நோக்கெல்லைக்கு பணத்தை விடுவிப்பது சம்பந்தமாக திறைசேரி செயலாளரை விசாரிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டள்ளது. அச் செயற்பாட்டிற்காக தனியே பாதீட்டு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு தேசிய பாதீட்டில் மேலும் முன்கொண்டு செயல்லல் பொருத்தமானது என்பதற்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது.<br><br>அதற்கிணங்க இந் நிதி பொதுத் திறைசேரியின் திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்து அமைச்சின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற ஏனைய புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பணத்தை விடுவிக்குமாறு வேண்டுதல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஔ) | ஆசிரியர் தரவுகளை உள்ளடக்கிய தரவு அடிப்படையினைத் (Data Base) தயாரிப்பதற்கு மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் உதவியுடன் கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை (EMIS) ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2011 மார்ச் மாத்திலிருந்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்தின் போது அறிவுள்ள ஒரு | 2011 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்ட ஆசிரியர் தகவல்கள் மற்றும் மாணவர் தகவல்களை உள்ளடக்கிய தகவல்முறைமையை தயாரிக்கும் நடவடிக்கையை விரைவாக பூர்த்தி செய்தல் வேண்டும். | ஆசிரியர்களுக்கான மனித வள முகாமைத்துவ முறைக்கு அணைத்து ஆசிரிர்களின் பிரிவேன ஆசிரியர்களின் ஆசிரிய உதவியாளர்களின் தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.<br><br>இம்முறைமை நாளாந்த பயன்பாட்டிற்காக முறைமைப்படுத்துவதற்கான சுற்றறிக்கை மற்றும் |

| | |
|---|---|
| சமூகத்திற்கான கல்விச் செயற்திட்ட (EKSP) நிதியிலிருந்து செலவு செய்யப்பட்ட பணம் ரூபா 64.06 மில்லியனாகும்.<br><br>மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு ரூபா 14.78 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தும் அம்முறைமையை விளைதிறனாகப் பயன்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை முடியாதிருந்தது. | அறிவுறுத்தல் கோவைகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்துகொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சிநிரல் தொடர்பான தேசிய கல்வி ஆணைக்குழுவினால் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாடுகள் சம்பந்தமான நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ளும் வேலைத்திட்டம் திட்டங்களை உள்ளடக்கப்பட்:டு அந்த இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டிய மையப் புள்ளிகளும் அந்த இலக்குகளின் அடிப்படையில் அடைந்துகொள்வதனை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது அடைந்துகொள்ள வேண்டியுள்ள கல்வி சம்பந்தமான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தேவையான திட்டங்களைத் தயாரித்து அதனை நடைமுறையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |

**5. நல்லாட்சி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | **ஒழுக்கம் மற்றும் புலனாய்வு சம்பந்தமான செயலாற்றல்** | | |
| | மீளாய்வாண்டின் இறுதியில் தீர்த்துவைக்கப்படாத 333 ஒழுக்கம் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்பட்டதுடன் அவற்றில் 16 கல்வியியல் கல்லூரிகளுக்கும் 20 அமைச்சிற்கும் 59 கொழும்பு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கும் உரியவையாகும். இப் பிரச்சினைகளில் 09 பிரச்சினைகள் 7 ஆண்டுகளுக்கு மேற்பட்டவையாகவும் 30 பிரச்சினைகள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டவையாகவும் 128 பிரச்சினைகள் 2 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் மிகைத்ததாகவும் காணப்பட்டன. 19 சிறுவர் துஸ்பிரயோக விசாரணைகளும் 42 நிதி ஒழுங்கீன விசாரணைகளும் 62 பாடசாலை மாணவர்களைச் சேர்தல் சம்பந்தமான விசாரணைகளும் காணப்பட்டன. இப் பிரச்சினைகளை தாமதமின்றி தீர்த்து மீண்டும் ஏற்படும் ஆபத்தினைத் தவிர்த்துக் கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிகவும் அதிக அளவில் சேர்ந்து காணப்படுகின்ற ஒழுக்கம் சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்த்து முடிவுறுத்துவதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அமைச்சு, தேசிய பாடசாலைகள், கல்வியியல் கல்லாரிகள் ஆகிய நிறுவனங்களுக்குரிய மீளாய்வாண்டின் இறுதியில் திர்வு செய்து முடிவுறுத்தப்படாது ஒழுக்கப் பிரச்சினைகள் 397 ஆகும். 2018.12.31 ஆந் திகதியளவில் முடிவுறுத்தப்படாத கோவைகளில் 2019.04.30 ஆந் திகதி வரை காணப்படுகின்ற கோவைகள் 333 மாத்திரமாகும். மேற்கூறிய சிக்கல்களுக்கு மத்தியல் கல்வியல் கல்லூரிகள் தொடர்பான தீர்வு செய்து முடிவுறுத்தப்படாத பிரச்சினைகளின் எண்ணிக்கை 16 ஆகும். கொழும்பு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்குரிய விசாரணைகளின் எண்ணிக்கை 77 ஆகும். 2019.04.30 ஆந் திகதியில் அவற்றில் 59 கோவைகள் காணப்படுவதுடன் கல்வி அமைச்சிற்குரிய கோவைகளின் எண்ணிக்கை 20 ஆகும். |
| (ஆ) | கல்வி அமைச்சினால் சேவைகளை நிறைவேற்றும் போது உருவாகியுள்ள சிக்கல் நிலைமை சம்பந்தமாக 2016, 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகிளன் போது பொது மக்கள் முறைப்பாடுகள் முறையே 133, 131 மற்றும் 110 கிடைத்திருந்தன. சட்டங்கள் விதிகள் பிரமாணங்களை மீறியமை மற்றும் நிர்வாக | நிதி நிர்வாகம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் சம்பந்தமாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளின் அளவைக் குறைப்பதற்கான | பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல் முறைப்படியாக இடம்பெறுவதற்காக கணனி முறைமையை மிகவும் செயற்திறனாகப் பயன்படுத்துவதற்கு பாடப் பணிப்பாளர்களுக்கும் |

| | | |
|---|---|---|
| ஒழுங்கீனங்கள் மற்றும் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளல் தொடர்பான பொது மக்கள் முறைப்பாடுகள் இவற்றுக்கு மத்தியில் அதிகமானவையாகக் காணப்பட்டன. | பரிகாரங்கள் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். | நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கும் தெளிவுபடுத்தும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.<br><br>பொது மக்கள் தினம் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சின் அனைத்து பிரிவுகளுக்கும் தெளிவுபடுத்தப்பட்டு அதில் எடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் தொடர்பாக மேலும் விளக்கமளிக்கப்பட்டுள்ளன. |

## 6. மனித வளங்கள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாளதுவரையாக்கப்பட்ட பதவியணியினர் தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க கல்வி அமைச்சின் முறைப்டியாகத் தயாரிக்கப்பட:டு நாளதுவரையாகப் பேணப்டுகின்ற தரவு முறைமைகள் காணப்படுகின்றது என்பதற்கான சான்றுகள் காணப்படவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | அமைச்சிற்குரிய ஓட்டுமொத்த பதவியணித் தகவல்கள் சரியாக நாளது வரையாக்கப்பட்டு வருடாந்தம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2018.12.31 ஆம் திகதிய நாளது வரையாக்கப்பட்ட அமைச்சின் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து பதவியணியினர் தொடர்பான தகவல்கள் இணைக்கப்பட்டுள்ளது. |